ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1819/29 - 2013 ජූලි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.07.18

*1819/29 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு,முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன ஆகிய நான், நிதி அமைச்சு விடயம் தொடர்பான அமைச்சருடன் கலந்துரையாடிய பின் இவ்வறிவித்தல் மூலம் பின்வருமாறு பொறுப்புச்சாட்டப்பட்டுள்ளேன் :-*

*(1) மேல் மாகாணத்தில் கொழும்பு டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தையில் மொத்தம் முன்னூற்று ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர் (US$ 350,000,000) முதலீட்டொன்றுடன் கூட்டம் மற்றும் மாநாட்டு வசதிகள், சூதாட்ட நடவடிக்கைகள், சிறந்த உணவகங்கள் மற்றும் சார்ந்த ஏனைய வசதிகளுடன் குறைந்த பட்சம் நாநூறு அறைகளை உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வகம் ஒன்றை நிறுவிச் செயற்படுத்துவதற்கான கருத்திட்டத்தை மேற்படிச் சட்டத்தின் தேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றென இனங்காண்பதற்காக, மேலும் எதிர்பார்க்கப்படும் சுமார் 2,600 உள்நாட்டு ஊழியர்களுக்கான தொழில்வாய்ப்புக்களை உற்பத்தி செய்யக்கூடிய இத்தகைய கருத்திட்டம் பொருளாதார மற்றும் சமூக நலன்களைப் பெற்றுத்தரக்கூடிய தேசிய நலனைக் கொண்டதாக இருப்பதோடு நாட்டின் நிலத்தோற்றத்தையும் மாற்றியமைக்கும், மேலும், வரையறுக்கப்பட்ட லேக் லெசர் (தனியார்) கம்பனி ("கருத்திட்டக் கம்பனி") இலங்கை முதலீட்டுச் சபையுடன் இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டு (2013) யூன் மாதம் இருபத்தி ஏழாம் திகதி (27) கருத்திட்ட ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்பதை அறிவிப்பதற்காகவும்.*

*(2) கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதி இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி ஆகியவற்றுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்ட திகதியாகவிருக்கும் என்பதை பிரகடனப்படுத்துவதற்காக, சொல்லப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத்தின் திகதியில் இருந்து நாற்பத்தியெட்டு (48) மாதங்களுக்குள் கருத்திட்டத்தின் அமுலாக்கம் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.*

*(3) மேற்படி கருத்திட்டத்தின் தேவைகளுக்காக திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின்படி, இவ்வறிவித்தலின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்களிப்புக்கள் இக்கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



2- G 17984

**அட்டவணை**

*(1) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்.*

(i) *கம்பனி வருமான வரி –*

*சபையினால் கணக்கீடு செய்யப்படக்கூடியவாறான மதிப்பீட்டு ஆண்டின் இருந்து பத்து (10) வருடக் காலப்பகுதியொன்றுக்கு கருத்திட்டத்தின் நடவடிக்கைகளில் இருந்து உற்பத்தியாகும் கம்பனியின இலாபத்துக்கு வருமான வரி செலுத்தல் தொடர்பான திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசிய இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது.*

*கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த மூன்று (3) வருடங்களின் பின்னால், அதில் எது முதலில் வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் சொல்லப்பட்ட வரி விளக்களிப்புக் காலப்பகுதி ஆரம்பமாகும்.*

*மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின், வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் இறுதி திகதியை உடன் அடுத்து வரும் பன்னிரண்டு (12) வருடக் காலப்பகுதியொன்றுக்கு வரி வீதத்தின் குறைவான ஆறு சத வீதத்தில் (6%) அல்லது ஹோட்டல் கைத்தொழில் துறைக்குத் தோதான அக்காலப்பகுதியில் அமுலில் இருக்கும் வரி வீதத்தில் நூற்றுக்கு ஐம்பது (50%) சத வீதத்தில் கம்பனியின் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் வரி அறவிடப்படும்.*

(ii) *பங்கிலாபத்தின் மீதான வரி –*

*இலாபங்களில் இருந்து பங்குதார்களுக்கு விலக்களிக்கப்பட்ட கம்பனியின் இலாபத்தில் இருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு சொல்லப்பட்ட பத்து வருட (10) கால வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

(iii) *தடுத்து வைக்கும் வரி –*

*மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் தொழில்நுட்பக் கட்டணங்கள் முகாமைத்துவக் கட்டணங்கள், பங்கு வீத உரிமைத் தொகைக் கட்டணங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டணங்கள் ஆகியவை தொடர்பில் தடுத்து வைக்கும் வரி செலுத்துவதில் இருந்து கம்பனிக்கு விளக்களிப்பு வழங்கப்படும்.*

*ஆயின், அடிப்படை முகாமைத்துவ கட்டணங்கள்/பங்குவீத உரிமைத் தொகைக் கட்டணங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டணங்கள் என்றவாறான கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் மூன்று வீதத்தையும் (3%) சந்தைப்படுத்தல் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து வீதத்தையும் (1.5%) மற்றும் ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு இலாபத்தின் பத்து சதவீதத்தையும் (10%) விஞ்சாதவிடத்து, முகாமைத்துவக் கட்டணங்கள், பங்குவீத உரிமைத் தொகைக் கட்டணங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டணங்கள் மீது தடுத்து வைக்கும் வரி செலுத்துவதில் இருந்த கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

(iv) *நீங்கள் உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (நீ. உ. செ. வரி) –*

*ஆகக்கூடிய ஊழியர்கள் முப்பது (30) பேர்களுக்கு மேற்படாத கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்கள் நீ. உ. செ. வரி (PAYE Tax) அறவிடப்படுதல் மற்றும் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்படுவர். ஐந்து (05) வருடக் காலப்பகுதியொன்றுக்கு இச்சலுகை ஏற்புடைத்தாகும். சிறந்ததொரு முயற்சியாக படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களை உள்நாட்டு ஊழியர்களைக் கொண்டு கம்பனி மாற்றீடு செய்ய வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகிறது.*

*(2) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்*

*கருத்திட்டத்தின் நாற்பத்தியெட்டு (48) மாத அமுலாக்கக் காலப்பகுதியின் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் சேர்பெறுமதி வரி அறவிடல் மற்றும் கொடுப்பனவில் இருந்து சேர்பெறுமதிச் சட்டத்தின் கீழ் விலக்களிப்பு வழங்கப்படும். கம்பனி/கருத்திட்டத்துக்கு நேரடியாகப் பொருட்களை வழங்குபவர்களுக்கு மாத்திரமன்றி கருத்திட்டக் கம்பனி அனுமதித்தவாறான சேர்பெறுமதிச் சட்டத்தின் விளக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவாறாக கருத்திட்டக் கம்பனி/கருத்திட்டத்துக்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு உப ஒபந்தக்காரர் ஒருவர் வழங்கும் பொருட்களுக்கும் சேர்பெறுமதி வரி விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதிச் சட்டத்தில் விளக்கப்பட்டவாறு வழங்கப்பட்டவற்றின் பெறுமதி மீது சேர்பெறுமதி வரி செலுத்துவது கம்பனி மீது ஏற்புடைத்தாகும்.

(3) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்

(வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள்/விலைக்கழிவுகள் மற்றும் வரிகள் உள்ளிட்ட சார்ந்த செலவுகளைத் தவிர்ந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகைகள் போன்றவாறான) வாடிக்கையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட மொத்த தொகைகள் மீதான அமுலில் இருக்கும் வீதங்கள் போன்றவை திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பந்தய மற்றும் சூதாட்ட நடவடிக்கைகளின் பொறுப்பு இருக்கும்.

(4) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்

திருத்தப்பட்டவாறான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டத்தில் விளக்கப்பட்டு மற்றும் அனுமதிக்கப்பட்டவாறு கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியின் போது கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சகல பொருட்கள் மீது (கம்பனி நேரடியாக இறக்குமதி செய்தாலும் ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலம் பெறப்பட்டாலும்) துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவிலிருந்து கருத்திட்டக் கம்பனிக்கு, கீழே விடயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதே நிபந்தனைகளுக்கு ஏற்ப முழுமையாக விளக்களிப்பு வழங்கப்படும்.

(5) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்

கம்பனியின் ஒப்பந்தக்காரர்/கள் கருத்திட்டம் தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதி விதிப்பனவில் இருந்து விலக்களிக்கப்படுவர்.

(6) கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீதான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்

எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டம் தொடர்பான சகல மூலதனச் சுபாவத்தைக் கொண்ட பொருட்கள் மற்றும் சபை அனுமதித்தவாறான கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும். அவை கம்பனியால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டாலும் அல்லது ஒப்பந்தக்காரர்கள் மூலம் பெறப்பட்டாலும் அல்லது உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டாலும், கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தியெட்டு (48) மாதங்களுக்கு அவை தொடர்பில் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக நேரகாலத்துக்கு ஏற்றவாறும் இலங்கையில் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும்.

லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா. உ.,
முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2013, யூலை 18.

8- 150

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.